# சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## பல்கலைக்கழக அனுமதிகள் கல்வியாண்டு - 2025/2026

**இசை / நடனம் / நாடகமும் அரங்கியலும் / கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலைகள் - நுண்கலை சிறப்புமாணி பட்டப் படிப்புகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான செய்முறைத் திறன்காண் பரீட்சை**

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில பட்டப்படிப்பு கற்கை நெறிகளை பயில்வதற்கு பல்கலைக்கழக அனுமதிக்குரிய குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### அனுமதிக்கான குறைந்தபட்ச தகமைகள்

2025 இல் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (2025/2026 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலைப் பார்க்கவும்,) அத்தோடு தாம் தெரிவு செய்த பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச்சித்தியும் (C) ஏனைய இரண்டு பாடங்களில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

### பரீட்சை மொழி

செய்முறை/திறன்காண் பரீட்சைகள் அனைத்தும் தமிழ்மொழி மூலம் மட்டுமே நடாத்தப்படும். (2025/2026 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கைநூலைப் பார்க்கவும்)

### விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

விண்ணப்பதாரிகள் கீழே இணைக்கப்பட்ட Online விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து Online மூலம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவத்தின் பிரிவு 6 ல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களையும் Scan செய்து Online மூலம் எதிர்வரும் **13.05..2026** (புதன்கிழமை) அன்று அல்லது அதற்கு முன்னர் Online விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். தொழிநுட்ப உதவிக்காக பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள 065-2222663 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வேலை நாட்களில் மு.ப 9.00 – பி.ப 4.00 வரை தொடர்பு கொள்ள முடியும்.

இணையவழி (Link: https://forms.gle/j9Sc6VFJHhxhhTZN6 ) மூலம் விண்ணப்பித்ததன் பின்னர் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அச்சுப்பிரதியைப் பெற்று அதில் விண்ணப்பதாரிகள் ஒப்பமிட வேண்டும். இவ்வாறு ஒப்பமிடப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பிரிவு 6 ல் குறிப்பிடப்பட்ட அனைத்து ஆவணங்களின் **மூலப்பிரதிகளை** கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பரீட்சைகள் பகுதிப் **பிரதிப் பதிவாளரிடம்** பரீட்சைக்குச் சமூகமளிக்கும் தினத்தன்று சமர்ப்பிக்க வேண்டும்.

***விண்ணப்பப் படிவத்தின் பிரிவு 6(1)க்கான அறிவித்தல்***

இசை, நடனம் மற்றும் நாடகமும் அரங்கியலும் பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பதாரிகள் ரூபா. 1000/- ஐயும் மற்றும் கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலைகள் பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பதாரிகள் ரூபா. 1500/- ஐயும் பரீட்சைக் கட்டணமாக செலுத்திய பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கவேண்டும். இக்கொடுப்பனவு **"பிரதி நிதியாளர், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்" கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை** என்ற பெயருக்கு வங்கிக் கணக்கிலக்கம் 075-100110000-767 மக்கள் வங்கி, மட்டக்களப்புக் கிளைக்கு வைப்புச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

***விண்ணப்பப் படிவத்தின் பிரிவு 6(2)க்கான அறிவித்தல்***

க.பொ.த (உ/த) பரீட்சைச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும். இவை பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

***விண்ணப்பப் படிவத்தின் பிரிவு 6(3)க்கான அறிவித்தல்***

விண்ணப்பப்படிவத்திலும் கல்விச்சான்றிதழ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள பெயரில் ஏதாவது வேறுபாடு காணப்படுமானால் இவை இரண்டும் ஒரே நபரைக் குறிக்கின்றன என்பதை உறுதிப்படுத்தும் உறுதிமொழியும் இணைக்கப்படுதல் வேண்டும்.

பிரவேச அனுமதித் தகைமைகளைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளுக்கு செய்முறை பரீட்சை நடைபெறும் திகதி மின்னஞ்சல் (e-mail) மூலம் அறிவிக்கப்படும்.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறாத சில மாணவர்கள் 2025ம் ஆண்டுக்கான உயர்தர (Advanced Level) பரீட்சையின் மீள்பரிசீலனைக்கு (re-scrutiny) விண்ணப்பித்திருந்தால் அத்தகைய ஆவணங்களைச் சமர்ப்பித்து செய்முறை/திறன்காண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

பல்கலைக்கழக அனுமதிக்கு தேவையான மிகக் குறைந்த தகைமைகளை கொண்டிராத அல்லது உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) சான்றிதழ்கள் இணைக்கப்படாத அல்லது கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்படாத அல்லது குறித்த திகதிக்குப் பிந்தி கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பிரதிப் பதிவாளர்**
**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**கல்லடி, மட்டக்களப்பு.**